# யோகம் தரும் பலன்கள்..!!

- இந்த பிரபஞ்சம் எண்ணற்ற பல விஷயங்களையும், மறைமுகமான செயல்பாடுகளையும் கொண்டிருப்பது போல, மனிதர்களின் வாழ்க்கையில் பலவிதமான செயல்களும், செயல்பாட்டு முறைகளும் மறைமுகமாக செயல்பட தொடங்குகின்றன.

- பிரபஞ்சத்திலும், மனிதர்களின் வாழ்க்கையிலும் நடைபெறுகின்ற இந்த மறைமுக செயல்பாடுகளை கட்டுப்படுத்துவதில் நவகிரகங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றது.

- இந்த பிரபஞ்சத்தில் பிறந்த எதையும் பகுத்தறிந்து உணரும் தன்மை கொண்ட ஜீவராசிகளுக்கு, துன்பங்களை அனுபவிக்கும் எண்ணம் என்பது சிறிதளவும் இருப்பதில்லை. மாறாக துன்பமான சூழ்நிலைகளிலும், இன்பமான சூழ்நிலைகளையும் எதிர்பார்க்கின்றனர்.

- அந்த சூழ்நிலையை உருவாக்கிக் கொள்ள நமது ஜாதகத்தில் கிரகங்களின் அமைப்பு என்பது முக்கிய அமைப்பு ஆகும். நவகிரகங்களின் அமைப்பையும், செயல்பாடுகளையும் கொண்டு நமது வாழ்க்கையில் நடைபெற போகின்ற அதிர்ஷ்டம் மற்றும் துரதிர்ஷ்ட பலன்களை விரிவாக அறிந்துகொள்ள இயலும்.

- நவகிரகங்களில் இருக்கக்கூடிய கிரகங்களின் அமைப்பு என்பது ஒருவருக்கு எல்லாவிதமான சுப பலன்களையும் அவரவர்களின் திசா புத்திகளின் அடிப்படையில் வழங்குகின்றன. பல நேரங்களில் இவைகள் நமக்கு சாதகமாக அமைந்தாலும், சில நேரங்களில் நமக்கு சில பாதகங்களையும் ஏற்படுத்துகின்றன.

- நமது ஜாதகத்தில் இருக்கக்கூடிய கிரக அமைப்புகளுக்கு ஏற்ப நமது ஜாதகத்தில் பலவிதமான யோகங்களும் நிரம்பியிருக்கும். அவ்விதத்தில் நமது ஜாதகத்தில் கிரகங்களின் அமைப்பிற்கு ஏற்ப என்னென்ன யோகங்கள் இருக்கின்றன? மற்றும் அந்த யோகங்களின் பலனாக ஏற்பட இருக்கின்ற பலன்களை பற்றி பார்ப்போம்.

## யாருக்கு என்ன யோகம்? என்ன பலன்?

- யோகம் என்பது நாம் செய்த கர்ம வினைகளின் அடிப்படையில் நாம் அனுபவிக்கும் இன்பமாகும். தோஷம் என்பது நாம் முன் ஜென்மத்தில் செய்த தீய வினைகளால் இப்பிறவியில் அனுபவிக்கும் துன்பமாகும்.

- இதை தான் நம் முன்னோர்கள் 'தினை விதைத்தவன் தினையை அறுவடை செய்வான்' என்று சொன்னார்கள். செய்த வினையை யாராலும் மாற்ற முடியாது. ஆனால், செய்யப்போகும் வினையை மாற்றும் ஆற்றல் நம் எல்லோருக்கும் உண்டு.. இனி வரும் காலங்களில் வினையின் தன்மையை அறிந்து செயலாற்றி இப்பிறவியில் மட்டுமல்லாமல் எப்பிறவியிலும் யோகம் உடையவராக வாழ்வோம்.

## ருசக யோகம்

- செவ்வாய் தனது வீடுகளான மேஷம் மற்றும் விருச்சிகத்தில் ஆட்சி பெற்றாலோ அல்லது மகரத்தில் உச்சம் அடைந்தாலோ கேந்திர ஸ்தானங்களில் நின்றாலும் அது ருசக யோகம் என்று அழைக்கப்படும்.

### ருசக யோகத்தால் ஏற்படும் நன்மைகள் :

- இந்த யோகத்தால் எல்லா காரியங்களிலும் ஜெயம் கொள்வார்கள்.

- செல்வ செழிப்புகள் கொண்ட செல்வந்தராய் வாழ்வார்கள்.

- நல்ல பண்புள்ள உறுதியான உடல் அமைப்பை கொண்டவராக இருப்பார்கள்.

- தன்னை பற்றி எப்போதும் உயர்வாக எண்ணக்கூடியவர்கள்.

## பத்ர யோகம்

- புதன் தனது வீடான மிதுனம் மற்றும் கன்னியில் இருந்தாலோ அல்லது உச்ச வீடான கன்னியிலும் கேந்திர இடங்களில் நின்றால் அது பத்ர யோகம் என்று அழைக்கப்படும்.

### பத்ர யோகத்தால் உண்டாகும் நன்மைகள் :

- ஆயுள் பலம் அதிகரிக்கும்.

- கணிதம் மற்றும் கலைகளில் நன்றாக தேர்ச்சி அடைவார்கள்.

- சகல ஐஸ்வர்யங்களுடன் அதிகாரம் உடைய எல்லோராலும் விரும்பக்கூடிய அரசனை போல் வாழ்வார்கள்.

## அம்ச யோகம்

- குரு தனது வீடான தனுசு மற்றும் மீனத்தில் இருந்தாலோ அல்லது உச்ச வீடான கடகத்தில் நின்று அது கேந்திரமான இடங்களில் நின்றால் அது அம்ச யோகம் என்று அழைக்கப்படும்.

### அம்ச யோகத்தால் உண்டாகும் நன்மைகள் :

- பெருந்தன்மை கொண்ட அனைவருக்கும் கொடுக்கும் கொடை வள்ளலாக இருப்பார்கள்.
- நல்ல வசீகரம் உடைய இலட்சணமான முகம் கொண்டவராக இருப்பார்கள்.
- குறைவற்ற புலன்கள் அமையப் பெற்று பிரபுவாகத் திகழ்வார்கள்.

## மாளவ யோகம்

- சுக்கிரன் தன் வீடான ரிஷபம் மற்றும் துலாமில் ஆட்சியோ அல்லது மீனத்தில் உச்சமாகி இருந்து அது லக்னத்திற்கு கேந்திரம் ஏறினால் அது மாளவ யோகம் எனப்படும்.

### மாளவ யோகத்தால் உண்டாகும் பயன்கள் :

- செல்வ செழிப்புடன் வாழக்கூடிய செல்வந்தராக இருப்பார்கள்.
- எதிலும் அஞ்சா நெஞ்சுடன் தைரியத்துடன் செயல்படுவார்கள்.
- நல்ல இல்லத்துணை அமைய பெற்று அனைத்து இன்பங்களையும் அனுபவிக்கக்கூடியவர்கள்.

## ஸல யோகம்

- சனி தன் வீடான மகரம் மற்றும் கும்பத்தில் ஆட்சியோ அல்லது துலாமில் உச்சமான இடத்தில் நின்று அது கேந்திரமடைந்தால் ஸல யோகம் உண்டாகும்.

**ஸல யோகத்தால் உண்டாகும் பயன்கள் :**

- அதிகாரமுள்ள பணிகள் அமையும்.
- ஒரு நிறுவனத்தை தொடங்கி பல பேருக்கு சம்பளம் அளிக்கும் நிலை ஏற்படும்.

## தர்மகர்மாதி யோகம்

- பத்துக்கு உடைய கர்மத்ஸ்தானம், ஒன்பதுக்கு உடைய பாக்கியத் ஸ்தானம் நல்லகேந்திர ஸ்தானங்களில் நின்றால் அது தர்மகர்மாதி யோகம் எனப்படும்.

**தர்மகர்மாதி யோகத்தால் உண்டாகும் பயன்கள் :**

- செல்வாக்கு பெருகும்.
- சௌபாக்கியம் உண்டாகும்.
- ஐஸ்வர்யம் கிட்டும்.
- எதிர்பார்த்த இடங்களில் தொழில் மற்றும் வேலை வாய்ப்புகள் உண்டாகும்.

## விரிஞ்சி யோகம்

- லக்னாதிபதி, சனி மற்றும் குரு இந்த மூவரில் யாராவது ஒருவர் ஆட்சியோ அல்லது உச்சமோ அடைந்து அது கேந்திரமானால் விரிஞ்சி யோகம் ஏற்படும்.

**விரிஞ்சி யோகத்தால் உண்டாகும் பலன்கள் :**

- வேத ஞானம் கொண்டவர்களாக திகழ்வார்கள்.
- சாஸ்திர சம்பிரதாயங்கள் அறிந்து தீர்க்க ஆயுளுடனும், குடும்ப வாரிசுகளுடனும் வாழ்வார்.
- அரசு சார்ந்த சன்மானங்கள் கிடைக்கப் பெறுவார்கள்.
- நல்ல தெய்வ விசுவாசியாகவும், தெய்வ பக்தியுடனும் வாழக்கூடியவர்கள்.

## அஷ்ட லட்சுமி யோகம்

- ராகு 6-ல் நிற்க கேது 12-ல் நிற்க குரு கேந்திரமான இடத்தில் இருந்தால் அது அஷ்ட லட்சுமி யோகம் எனப்படும்.

**அஷ்ட லட்சுமி யோகத்தால் உண்டாகும் பலன்கள் :**

- சகல சம்பத்துகளும் கிட்டும்.
- சகல ஐஸ்வர்யங்களையும் பெற்று சுகபோக வாழ்க்கை வாழ்வார்கள்.

## குருமங்கள யோகம்

- குருவும், செவ்வாயும் மீனம், தனுசு, மகரம், மேஷம், விருச்சிகம் மற்றும் கடகம் போன்ற ராசிகளில் இணைந்து நின்று அது கேந்திரமடைந்தால் குருமங்கள யோகம் உண்டாகும்.

**குருமங்கள யோகத்தால் உண்டாகும் பலன்கள் :**

- அதிகாரம் மற்றும் அந்தஸ்து உயரும்.
- கீர்த்திக்கு உடையவர்கள்.

## அதிர்ஷ்ட லட்சுமி யோகம்

- களத்திரகாரகனான சுக்கிரன் லக்னத்திற்கு ஒன்று, ஐந்து மற்றும் ஒன்பதாவது இடங்களில் நின்று சுக்கிரன் ஆட்சி செய்யும் இடம் நட்பு வீடாகவோ அல்லது உச்ச வீடாகவோ இருந்தால் அது அதிர்ஷ்ட லட்சுமி யோகம் எனப்படும்.

**அதிர்ஷ்ட லட்சுமி யோகத்தால் உண்டாகும் பலன்கள் :**

- லட்சுமி கடாட்சம் மிக்கவர்.
- பெண்களின் நேசமும், அதிர்ஷ்டமும் உண்டாகும்.

## பேரி யோகம்

- சுக்கிரனுக்கு குரு கேந்திரம் பெற்று, ஒன்பதாம் இடத்தில் வலுத்து நின்று பலமாய் அமைந்திட பேரி யோகம் ஆகும்.

### பேரி யோகத்தால் உண்டாகும் பலன்கள் :

- நோயில்லாமல் சுகமாய் வாழ்வார்கள்.
- நல்ல குணமுடைய ஆசார சீலனாய் வாழ்வார்.

## தாரை யோகம்

- சந்திரனுக்கு நான்காம் வீட்டிலோ அல்லது பத்தாம் வீட்டிலோ சுக்கிரன் இருந்தால் தாரை யோகம் உண்டாகும்.

### தாரை யோகத்தால் உண்டாகும் பலன்கள் :

- பெரும் மனைக்கு உரியவராக திகழ்வார்.
- சொகுசான வாகன வசதியை அமையப் பெற்றவராகவும் இருப்பார்.
- தனத்திற்கு உரியவராகவும் விளங்குவார்.

## கோடீஸ்வர யோகம்

- ராகு கேந்திரத்தில் தனித்து நின்றால் கோடீஸ்வர யோகம் ஏற்படும்.
- ராகு சரராசிகளில் ஒன்று தனித்து நின்றும், குருவுடன் கேது சேர்ந்து இருந்தாலும் கோடீஸ்வர யோகம் ஏற்படும்.
- புதனும், சுக்கிரனும் அல்லது புதனோ, சுக்கிரனோ குரு கேதுவுக்கு 9ல் நின்றால் கோடீஸ்வர யோகம் ஏற்படும்.
- ராகுவுக்கு 9ல் புதனும், சுக்கிரனும் நின்றால் கோடீஸ்வர யோகம் ஏற்படும்.